Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p586 TIRJTS-2026-0054
DOI: 10.63300/tamilmanam.v12i06.34

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

சமுதாய நோக்கில் கவிஞர் அறிவுமதியின் வலி

Poet Arivumathi's Pain from a Social Perspective

முனைவர் அ. இளையராஜா[1,*]

[1] உதவிப்பேராசிரியர் முதுகலைத் தமிழ்த்துறை சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேரணி, விழுப்புரம்.

***Corresponding author:** முனைவர் அ. இளையராஜா, raja1992ar@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 10 November 2026
Accepted: 15 November 2026

Article ID
TIRJTS-2026-0054

Peer review
Double-blind peer review

Keywords
Society
Poet Arivumathi
Eelam
Feminism
Culture
Pain

ABSTRACT

This study primarily examines the manner in which Poet Arivumathi's poems are crafted around Tamil linguistic consciousness, social awareness, feminism, and cultural sensibility. Focusing on society as the central space of human coexistence and lived experience, the paper explores how literature reflects human life events, customs, beliefs, and existential realities, while also addressing gender distinctions and the pursuit of recognition, identity, and equal rights for women within society as depicted through Arivumathi's poetry.

How to cite this article: முனைவர் அ. இளையராஜா (2026). சமுதாய நோக்கில் கவிஞர் அறிவுமதியின் வலி. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 586. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.34
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

கவிஞர் அறிவுமதி கவிதைகள் தமிழ்மொழி உணர்வு, சமுதாய உணர்வு, பெண்ணியம் மற்றும் பண்பாட்டு உணர்வு குறித்து எழுதப்பட்டுள்ள பாங்கினை முதன்மையாகக் கொண்டு இவ்வாய்வுச் சுருக்கம் அமைகின்றன.

திறவுச்சொற்கள்: சமூகம், கவிஞர் அறிவுமதி, ஈழம், பெண்ணியம், பண்பாடு, வலி

முன்னுரை

சமுதாயம் என்பது பூமியில் பிறந்த மக்கள் அனைவரும் ஒரே திரளாக வாழ்வதற்குக் காரணமாகிறது. இந்த சமுதாயம் மிகவும் விரிவான பரப்புகளையும் கொண்டது இதனை முழுவதுமாக புறக்கணித்துவிட்டு மனிதாகள் வாழவும் முடியாது. ஆகவே சமுதாயத்தை மையமாக வைத்தே இலக்கியங்கள் உருவாகி அவற்றுள் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் பாடுபொருளாக அமைந்தன எனவே மக்களின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், வாழ்வியல்கூறுகள் அவற்றுள் இடம் பெற்றன மேலும் சாமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் இனம் காலப்போக்கில் பாலினப் பின்புலத்தில் 'ஆண்', 'பெண்' என்னும் பாகுபாட்டை உணாவதற்கும் களம் அமைந்தது. எனவே சமுதாயத்தில் பெண்களுக்குரிய அங்கீகாரமும் அடையாளமும் பற்றி, அறிவுமதியின் கவிதைகள் வாயிலாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

சமுதாயம் - சொற்பொருள் விளக்கம்

நா. கதிரைவேற் தமிழ்மொழி அகராதி சமுதாயம் என்பதற்கு மக்கள் பலர் பிள்ளையின் கூடி வாழும் இனக்குழுவே சமுதாயம் ஆகும்; சமுதாயம் என்னும் சொல்லில் காணப்படும் தாயம் என்னும் சொல் "உரிமை"[1] என்னும் பொருளில் அமைந்துள்ளது. பண்டைத் தமிழ் நூலாகிய பட்டினப்பாலையிலும்

"உருகெழு தாயம் ஊழின் எயதி"[2]

எனவரும் அடியில் தாயம் என்பதற்கு உரிமை என்னும் பொருளில் பயன்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. ஆகவே, ஏற்றத் தாழ்வின்றி அனைத்து நலன்களையும் பொது உரிமையாகப் பெற்றுச் சமமாக வாழ்வதே சமுதாயமாகும் என உணரலாம்.

சமுதாயமும் இலக்கியமும்

மக்கள் அனைவரும் உயர்வு, தாழ்வு கருதாமல் எல்லா வகையான உரிமைகளையும் பொதுவாகப் பெற்றுக் சமமாக வாழ்வதே சமுதாயம். இச்சமுதாயம் இல்லையென்றால் இலக்கியம் தோற்றம் பெறுவதில்லை. இலக்கியம் என்பது மனித வாழ்க்கை நிகழ்வுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் ஒரு களமாகும். இவற்றுள் தமிழ்ச் சமுதாயத்தின் இலக்கியப்படைப்பாளிகள் தங்களது சொந்த அனுபவங்களையும் மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் தமக்குரிய உணர்வுகள் வழியாக இலக்கியப் படைப்புகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இதனை,

"இலக்கியம் மனித வாழ்க்கையின் எதிரொலிகள் சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல்கற்கள் அது மனித லட்சியத்தின் உயிர்நாடி"[3] "ஒரு சமுதாயம் வாழ்ந்த வாழ்வினைக் காணவும் மேற்கொண்ட இலட்சியத்தை அறியவும் பழகிவந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் தெளிவையும் அறிய அவர்களிடையே நெடுங்காலமாக வளர்ந்துள்ள இலக்கியமும் கலைகளும் பெரிதும் துணையாகும்"[4]

ஆகிய கூற்றுகள் தெளிவுபடுத்தியுள்ளதன் மூலம் உணரலாம். மேலும் மனிதர்களது இன்ப, துன்பங்கள், ஏற்றத்தாழ்வு நிலைகள் பொருளாதாரச் சிக்கல்கள், சமத்துவம், ஒற்றுமை ஆகியவற்றை எடுத்துரைத்து ஒரு மறுமலர்ச்சிக்குரிய கருவியாகச் செயல்பட வேண்டும் என்பதையும் உணரலாம்.

இதன் பின்புலத்தில் பல புதுக்கவிஞர்கள் சமுதாயத்தை உருவாக்குபவார்களாக உள்ளனர். இந்த சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு குறைகளையும் சுட்டிக்காட்டி நல்வழியில் செலுத்துவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். இது மட்டுமின்றி சமுதாயச் சிக்கல்களை எடுத்துக் கூறி அவற்றிற்கு ஒரு சிறந்த தீர்வு காண்பவர்களாகவும் அமைகின்றனர். அக்கவிஞார்கள் காலச்சூழலுக்கேற்பத் தானாகவே தோன்றுகின்றனர் என்பதனை,

“கவிஞன்

பிறப்பதுமில்லை

ஏனெனில்

எந்தக் கருப்பையும்

அவனை

அசுத்தப்படுத்திவிடமுடியாது

அவன்

தோன்றுகிறான்!”[5]

என்னும் கவிதைவரிகள் உணர்த்தும்.

இதன் அடிப்படையில் சமுதாயத்தைப் பேணிக்காக்கும் இலக்கியவாதியாகவும் தம் படைப்புகளில் புதிய பரிமாணத்தையும் உணர்வுகளது உச்சகட்ட உள்ளார்ந்த நிகழ்வுகளையும் விளக்கி, அழகியலை மானுடத்தோடு கலந்து புதிய மாற்றத்தை உலகில் விதைப்பவராகத் திகழ்பவர் கவிஞர் அறிவுமதி ஆவார்.

இவர் சமுதாயத்தில் தம்மைச் சுற்றியுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் கூர்ந்து நோக்கி, அவர்களது வாழ்வியல் அவலங்களையும், சிக்கல்களையும் படைப்புகள் வழி எடுத்துரைத்து நடப்பியல் மெய்மமைகளை உணர்த்தியவர்.

அதே போல சமுதாயம் முன்னேறுவதற்கு அடிப்படையானது உழைப்பாகும். ஆனால் இந்த உழைப்பைக் கையில் ஏந்திய மக்கள் வறுமைத்துயரத்தில் உள்ளனர். இவர்களது வறுமையைக் கூட பணமாக்குகின்ற ஒரு முதலாளித்துவ கூட்டம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இம்மக்கள் ஏழ்மையால் சரியாக உணவு உண்ணாமல், இருப்பதற்கு இடமும் இல்லாமல் தவிக்கின்றனர். இவர்கள் மகிழ்ச்சியை எப்போதும்

பெறவில்லை இருப்பினும் அவர்கள் கையில் எப்போதும் ஆயுதங்கள் சூழல் காரணமாகவே திணிக்கப்படுகின்றன என்பதை,

“வறுமையின்

கைகளில்

ஆயுதத்

திணிப்பு”[6]

என்னும் கவிதைவரிகள் மூலம் உணர்த்தியுள்ளார். இந்த ஏழைகளது உழைப்பினால் மட்டுமே பல்வேறு வேலைகளும் செயல்களும் உலகத்தில் நிறைவு பெற்றுள்ளன. ஆனால் இவர்களது வாழ்க்கைத் தரம் உயராமல் பின் தங்கியே இருக்கிறது. இவர்கள் எப்போதும் முதலாளிகளைச் சார்ந்தே வாழும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். உழைக்கும் இந்த ஏழைகளுக்கு உரிய சம்பளமும் வழங்கப்படவில்லை. ஆகவே இவர்கள் தங்களுக்குரிய கொடுமைகளுக்கு எதிராகத் துணிந்து போராட வேண்டும் என்பதை,

“எதிர்க்கும்

துணிச்சல்

ஏழைக்கு

வண்டும்.”[7]

என்னும் கவிதை வரிகள் குறிப்பிடுகின்றன.

மேலும் “எழுத்தாளனுடைய சொந்த வாழ்க்கைக்கும் அவனது எழுத்துக்கும் உள்ள உறவு நெருக்கமானது. அவனுடைய சொந்த வாழ்க்கை அனுபவம் அவன் எழுத்துக்கான மூல வித்தையும் தருகிறது”[8] என்னும் கூற்றிற்கேற்ப தாம் நேரில் கண்ட மனிதர்களது வாழ்க்கைத் துயரங்களையும் அவர்களது உழைப்பின் மேன்மையையும் பெண்களது உணர்வுகளையும் பாடுபொருளாக்கியவர் அறிவுமதி. இதனை அவரது “உழைப்பிலிருந்து ஒதுங்கி நின்று அழுக்குப் படாமல் பேசும் எந்தக் கலையும் மூல வாழ்வின் முகமறியாதவைதாம்”[9] என்னும் கருத்தும் உறுதிபடுத்தும்.

இலக்கியமும் பெண்மையும்

இலக்கியங்கள் வாயிலாக வெளிவரும் படைப்புகள் சமுதாயத்தை மையமாகக் கொண்டு செயல்படுகின்றன. இச்சமுதாயமும், மிகவும் விரிவான பரப்பைக் கொண்டதாகும். இவற்றுள் வாழும் மனிதன் தனது சமுதாயத்தை முற்றிலுமாக புறக்கணித்துவிட முடியாது. இவை படைப்பாளர்களுக்கும் பொருந்தும் மேலும் “படைப்பையும் படைப்பாளனையும் குறிப்பிட்ட சமுதாயச்சூழல்

உருவாக்கியிருக்கின்றது. எனவே காலச் சமுதாயச் சூழலின் பின்புலத்தினைப் புரிந்து கொள்வது சமுதாயவியல் திறனாய்வுக்கு அவசியம்!"[10] என்னும் கூற்றும் மேற்கருத்தைப் பலப்படுத்தும்.

மேலும் இலக்கியத்தை அணுகுவதும் அடிப்படையில் ஒரு சமுதாயத் தேவையாகவும் மாறுகிறது. அதன் மூலம் உணர்த்தப்படும் உண்மைகளைச் சமுதாயத் தளத்தில் வைத்துக் காணுகிறபோது தான் மாற்றம் ஏற்படவும் வழிவகை அமைகிறது. எனவே இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளை அறிந்து கொள்வதற்கும் படைப்புகள் துணை நிற்கின்றன.

இப்படைப்பு வெளி அந்தந்த கால கட்டத்திற்கு ஏற்ப மாறுபாடு தன்மை கொண்டவை. சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியங்கள் போன்றவை தோன்றியதன் அடிப்படையில் அவ்விலக்கியங்களது பின்புலத்தில் அகம், புறம், நீதி, பத்திமை என்றும் அவை மாற்றம் பெற்றன. "படைப்புலகின் இக்கோணங்களும் சரி, அவை உணர்த்துகின்ற சமுதாய அமைப்பின் கூறுகளும் சரி, தனித்தனியானவை அல்ல, அவை காரணகாரியத் தொடர்புடன் கூடியவை"[11] என்னும் கூற்றும் இங்கு நினையத்தகும்.

மேலும் இக்கால இலக்கியத்தில் புதுக்கவிதை தனித்த இடத்தைப் பெற்றது. "தமிழ்ப் புதுக்கவிதைகளில் 1960-1970 காலகட்டத்தில் பெண்களின் குரல்கள் புதுக்கவிதை இலக்கியத்தில் பதிவாகத் தொடங்கின"[12] என்னும் கருத்திற்கு ஏற்ப ஆண் படைப்பாளர்களைப் போலவே பெண்படைப்பாளர்களும் கவிதைத் துறையில் கால் பதித்தனர். இலக்கியத்தில் பெண்மையும் ஒரு பகுதியாகவே மாறியது. பொதுவுடைமை, சம உரிமை பெண்மை ஆகியவற்றின் தேவை சமுதாயத்தில் ஏற்பட்ட போது பல ஆண் படைப்பாளர்களும் அவை குறித்த கருத்துக்களைத் தம் எழுத்தின் மூலம் எடுத்துரைத்தனர்.

இவ்வாறு இலக்கியத்தில் பெண்மையை மதித்து எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்பவர் கவிஞர் அறிவுமதி, நாட்டிற்குரிய நல்லறங்கள் முதலில் வீட்டிலிருந்தே தொடங்குகின்றன. அவ்வாறு தொடங்குவதற்கு முழுமுதற் காரணமாக இருக்கும். பெண்மையை மதித்துப் போற்ற வேண்டும் என்பது இவரால் வலியுறுத்தப்பட்ட து.

"நடம்மா மனசு

நல்ல மனசு

திட்டும்போது தான்

வற தினுசு"[13]

என்னும் கவிதை வரியில் பெண்களின் மனம் நல்ல எண்ணம் கொண்டது என்பதை "நடம்மா" என்னும் வார்த்தை உத்தி மூலம் அறிவுமதி வெளிப்படுத்தியுள்ளார்.

அறிவுமதி படைப்புகளில் பெண்மையச் சமுதாய நிலை

மனிதன் சமுதாயத்தின் ஒர் அங்கமாக வாழ்பவன் என்றாலும் அதனோடு இணைந்தும் விலகியும் முரண்பட்டும் ஒன்றுபட்டும் வாழுகின்ற நிலையில் அவன் இருக்கிறான். இம்மனித சமுதாயம் ஆதிகாலம் முதலே ஆண், பெண், என்னும் இரு உயிர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இவற்றுள் சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும் (கலை, இலக்கியம், அரசியல், சினிமா) ஆண் முன்னிலை பெறுபவனாகவும் பெண் அடுத்த நிலையில் இருப்பவளாகவும் காணப்படுகிறாள். மேலும் ஆண்மையச் சமுதாயத்தின் அவள் அடிமைப்பட்டும் கிடக்கிறாள். மனுதாம சாஸ்திரத்திலும் பெண்களின் இயல்புகளென, "காமம், சினம், பொய், துரோக எண்ணம், ஒப்பனை, இருக்கை, படுக்கை யாவும் பெண்கள் பற்றியே தோற்றுவிக்கப்பட்டன."[14]

"நிலையற்ற மனம் கொண்டவர் மகளிர் நிலை பிறழ்வர் இவை பிறப்போடு வருவன - அழகும் வயதும் பாராது ஆடவரிடத்து மனம் இழப்பதும் அவரியல்பு நன்கு புரந்த போதும் கணவரது காவலை அவர் விரும்புவதில்லை அவர் ஒழுக்கம் கேடாகாது ஆடவர் கவனமாய்க் காக்க வேண்டும்"[15] என்று எழுதியிருப்பதும் வேதனைக்குரியதாகும் ஒரு சில சித்தர் பாடல்களிலும் பெண்களைக் குறை கூறி எழுதியபோக்கு காணப்பட்டது.

இதற்குப் பின்னர் 20, 21 ஆம் நூற்றாண்டுகளில் பாரதியார், பாரதிதாசன், பெரியார், வள்ளலார், தேசிகவிநாயகம் பிள்ளை, அப்துலரகுமான், மேத்தா, வைரமுத்து முதலிய கவிஞர்களும், சிந்தனைவாதிகளும் பெண்கள் குறித்த உயர்கருத்துகளைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தினர்.

பாரதியார் பாரதிதாசன், வள்ளலார் ஆகியோர்களைத் தம் படைப்பிற்குரிய முன் மாதிரியாகக் கொண்டவரும், அப்துல்ரகுமானிடம் ஆசி பெற்றவரும், வைரமுத்துவிடம் நெருங்கிய நட்பு கொண்டவருமாகிய அறிவுமதி கவிதையுலகில் தனிப்பெரும் இடத்தைக் கொண்டவர் எனலாம். "சமுதாயத்தில் காணலாகும் ஏற்றத்தாழ்வுகளை நிறை குறைகள், வாழ்க்கைப் போக்குகள் ஆகிய பலவற்றையும் கண்டு, அவற்றைத் தமது சொந்த பட்டறிவோடு படைப்புகளில் கொடுப்பவரே கலைஞராவார்"[16] என்னும் கூற்றிற்கு ஏற்ப கவிதையுலகில் அடியெடுத்து வைத்த அறிவுமதி தம் படைப்புகளில் பலவற்றையும் பாடு பொருளாக்கியுள்ளார்.

தமிழ்ச்சிந்தனையோடு வாழ வேண்டும்; தமிழாகளுக்காக குரல் கொடுக்க வேண்டும்; தமிழ்த் தெய்வங்களைக் கண்டறிந்து வழிபட வேண்டும் என்னும் கருத்தைச்

சுட்டியதோடு "முருக வழிபாடு" என்னும் தமிழர்களின் தொன்ம வழிபாடு இன்றைய தலைவர்களோடு இணைக்கப்பட்டதை,

"முருகா

நேதாஜியாகிய

காந்தியாக

மாற்றப் பட்டிருக்கிறாய்

ஆம்

இரத்தம் தோய்ந்த

உனது

இரும்புயேல்

தங்கவேலாக

மாற்றப்பட்டிருக்கிறது"[17]

என்னும் கவிதைவரிகளில் விளக்கித் தமிழர்களது வழிபாட்டு முறை மாறியதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். அதேபோல ஈழத் தமிழர்கள் மீதுள்ள பற்றின் காரணமாக அவர்களது வேதனைகளையும் துயரங்களையும் எவ்விதத் தயக்கமுமின்றி எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"எங்களால்

இறங்கி

வந்து

கரையேற முடிகிறது

உங்களால்

இறங்கி

வந்து உரையாட

முடியவில்லை"[18]

இவ்வாறு தமிழாநலன், வழிபாடு, நட்பு, காதல், இயற்கை, மனித நேயம் முதலியவற்றைத் பாடுபொருளாக்கிய கவிஞர் அறிவுமதி சமுதாயம் தழைப்பதற்கு முதன்மையாகச் செயல்படும் பெண்மை குறித்தும் சமுதாயத்தில் அவர்களுக்குரிய நிலைகுறித்தும் எழுதியிருப்பதும் பாராட்டத்தக்கதாகும்.

காலம் காலமாகப் பெண்களுக்குரியதாக மட்டுமே காட்டப்படும் கற்பும் ஒருதார மணம் பற்றியும், பதிவிரதா தாமம், பெண்ணிற்கே உரியதான மாதவிடாய் சிக்கல், வரதட்சணைக் கொடுமை, முதிர்கன்னி, கைம்பெண்களின் மறுவாழ்வு, அலுவல் மகளிரது பிரச்சனை பெண் உரிமை, பெண் புதுமை, பெண் புரட்சி பெண் பிரச்சினைக்குப் பெண்ணே போராடத்துணிதல், பாலியல் சமத்துவம் பற்றியும் சுட்டிக்காட்டி பெண்களுக்குரிய சமுதாய நிலையுமாக அவற்றைத் தம் கவிதைகள் வாயிலாக அறிவுமதி விளக்கி பெண்மையச் சமுதாயத்திற்கு விழிப்புணாவு ஏற்படுத்தியிருப்பதும் கருதத்தகும்.

அறிவுமதி - வலி

“மீனை அரியும்போது

கிடைத்தது

குழந்தையின் கண்”[19]

இலங்கைத் தமிழ் அகதிகள் கடல் கடந்து சிங்கள இராணுவத் தாக்குதலில் கடலில் இருந்து போனவர்கள் ஏராளம். அப்படி விழுந்த குழந்தையின் கண்ணை விழுங்கிய மீனொன்று பிடிப்பட்டபோது அதன் வயிற்றில் குழந்தையின் அந்தக் கண் இருந்தது. இது எவ்வளவு கொடூரமான காட்சி. தமிழ் அகதியின் நிலையை இதைவிடச் சொல்ல முடியாது.

“மயிலுக்கு

போர்வை

தந்தான்

பேகன்

ஒழுகுகிறது

அகதி

முகாம்”[20]

குளிரால் நடுங்குகிறது மயில் எனப் போர்வை தந்து கொடை மடம் பட்டான் பேகன். ஐந்தறிவு ஜீவனுக்கும் உதவிய தமிழ் மண்ணில் தமிழின அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி முகாமில் மழையால் ஒழுகுகிறது என அரசின்பால் போபம் கொள்கிறான் கவிஞர்.

“சற்றுமுன் செத்த

அப்பாவுக்கான

அழுகுரல்கள்

கேட்கின்றன

கைப்பேசியில்”[21]

தமிழக அகதி முகாம்களில் வதைபடம் ஈடத் தமிழ் அகதிகள் மீண்டும் தாய் நாட்டுக்குப் போய்வர இயலவில்லை. செத்துப் போன அப்பாவுக்கான அழுகுரல்களை கைபேசி மூலம்தான் கேட்க முடிகிறது.

தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இறையான்மை அற்று இருக்கிறது. இதை வெளிப்படுத்து வழி போல அகதிகளைப் பார்த்துக் கவிஞர் கூறுகிறார். நீங்கள் தமிழ் நாட்டிலிருந்து விடைபெறும் போது அதற்குள் அங்கே தனி நாடு தமிழ் ஈழம் கிடைத்தாலும் அந்தச் சொந்த நாட்டுக்கு நிங்கள் போவிர்கள். ஆனால் நாங்களோ இந்தியா என்ற சிறையில் இருப்போம் என்கிறார்.

“கழிப்பிடம்

மோசம்

வசிப்பிடம்

மோசத்திலும்

மோசம்”[22]

தமிழக அகதி முகாம்களின் சுகாதாரச் சீர்கேட்டைக் காட்டுவது போல கழிப்பிடம் மோசம் வாழும் இடம் அதைவிட மோசம் என்கிறார்.

“சுடப்பட்டுச் செத்த

அம்மாவின்

உடலை

அடக்கம்

செய்ய முடியாத

அவசரத்தில்

வந்து விட்டோம்

இராணுவம் வீசும்

எறிகணையில்

ஏதேனும் ஒன்று

இரக்கப்பட்டு

எங்கள்

வீட்டில் மீது

விழாதா”[23]

தமிழர் வாழும் பகுதியில் சிங்கள இராணுவம் எறிகளை வீசும் போது இறந்துபோன அம்மாவின் உடலை அடக்கம் கூட பண்ண முடியாமல் உயிருக்கும் பயந்து ஓடிவந்து விட்டோம்

“ஆழிப் பேரலைகளும்

எங்கள்

பெண்களை

வீடு புகுந்து

இழுத்துப் போய்

கொல்லத்தான் செய்தன

ஆனாலும்”[24]

இலங்கையில் சிங்கள இராணுவ வீரர்கள் தமிழ்ப் பெண்களை வீடு புகுந்து இழுத்துச் சென்று கற்பழித்துக் கொன்றனர். இதனை ஆழிப் பேரலைகளும் எங்கள் பெண்களை விடு புகுந்து இழுத்துப் போய் கொல்லத்தான் செய்தன. ஆனாலும் என்ற கவிதையில் ஆழிப்பேரலைகள் கற்பழிக்கவில்லை என்ற செய்தியை சொல்லாமல் சொல்லுகின்றார் கவிஞர்.

“கிழக்கிலிருந்துதான்

வந்தது

நிலா

நல்லவேலை

அகதி

என்ற பெயரிலிருந்து

அது

தப்பித்துவிட்டது”[25]

இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து கிழக்குத் திசையில் இலங்கைத் தீவு இருக்கிறது. கிழக்கிலிருந்து வந்த எங்களை அகதி என்ற பெயரில் அழைக்கிறார்கள். வருகிற நிலவை அகதி என அழைப்பதிலலை. அது தப்பிவிட்ட

என்ற கவிதை அவர்களின் துயரை வெளிப்படுத்துகிறது என்ற கவிதையில் இருந்து தப்பிக்கம் பயணத்திலும் மரண பயத்தை அறியவைக்கிறது.

“அனுக்காமல்

விட்டுவிட்டு வந்த

வயலில்

பசியார

வரும்

குருவிகளையாவது

சுடாமல்

இருப்பார்களா?”[26]

இலங்கைத் தமிழர்கள் எதிரிகளாக உயிருக்குப் பயந்து தமிழ்நாட்டுக்கும் உலகெங்கும் ஓடிய போது அவர்களின் வயல்களின் விளைச்சலைக் கூட அறுவடை செய்யமுடியாமல் ஓடினர். சென்ற பின்னர் நினைத்துப் பார்க்கின்றனர். நெல் விளைச்சல்களை குருவிகள் சாப்பிடும் அவற்றையும் சாப்பிட விடாமல் சிங்கள இராணுவத்தினர் சுடாமல் இருப்பார்களா என ஐந்தறிவு ஜீவன்களுக்கும் அன்பு காட்டுபவர்களாக இக்கவிதை சித்திரிக்கிறது.

“படகில்

ஏறினோம்

படகுகளை

விற்று”[27]

இலங்கையில் மீன்பிடித் தொழில் செய்தவர்கள் கூட சிங்களக் கடற்படை அட்டூழியங்களால் அங்கே வாழமுடியாமல் தம் வாழ்க்கையின் ஆதாரமாகிய படகுகளை விற்று விட்டு கடல் வழித் தப்பிக்கப் பணம் கொடுத்துப் படகில் ஏறினார்கள் என்பது அவர்களின் வாழ்க்கை இழப்பைக் காட்டுகிறது.

“நடுக்கடலில்

சுற்றிவளைக்கப்பட்ட

படகிலிருந்து

குதித்து

மூழ்கிக் கொண்டிருந்த

அக்காவைக்

காப்பாற்ற

துடிக்கவில்லை

பாசமுள்ள

தம்பி"[28]

இலங்கையிலிருந்து தப்பித்துவரும்போது நடுக்கடலில் படகை இலங்கை கடற்படை சுற்றி வளைத்தது உயிருக்குப் பயந்து படகிலிருந்து குதித்து கடலில் மூழ்கிக் கொண்டு இருந்த தன் சொந்த அக்காவைக் காப்பாற்ற முடியவில்லை பாசமுள்ள தம்பி என்ற கவிதை துயரத்தின் உச்சமாகும். ஒருபக்கம் இராணுவம் சுடுகிறது. ஒரு பக்கம் அக்காள் கடலில் குதித்து விட்டாள் கற்புக்கு அஞ்சி, தம்பியிடம் அக்காள் தம்பியின் துயரம் வார்த்தைகளால் எழுத முடியாதது.

"தவறியவர்கள்

மீன்களுக்கு

இரையானோம்

தப்பித்தவர்கள்

ஏன்களுக்கு

இரையானோம்"[29]

கடல் வழியாக வரும்போது படகு உடைந்தோ, சுடப்பட்டொ இறந்தவர்கள் மீன்களுக்க இரையானார்கள். தப்பித்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களை ஏன் வந்தீர்கள்? அங்கே என்ன தொழில் செய்தீர்கள்? போராளியா? பயிற்சி பெற்றீர்களா? போன்ற (ஏன்) என்ற கேள்விகள் என்றன. இதனை ஏன்களுக்க இறையானோம் என்ற குமுறல் வெளிப்படுத்துகின்றது.

"பிறந்த குழந்தையின்

நெற்றியில்

வைக்கிறாள்

பிபி

மண்ணாய்

எடுத்த

வந்த

தாய்மண்”[30]

என்னதான் அகதியாக தமிழகத்திற்கு ஓடி வந்தாலும் பிறந்து வாழ்ந்த இன்னொரு தாய் நாடான ஈழ மண்ணை மறக்க முடியவில்லை அவர்களால். எனவே இங்குப் பிறந்த குழந்தையின் நெற்றியில் பிடி மண்ணைய் எடுத்து வந்த தாய்நாட்டு மண்ணை பொட்டியில் வைக்கிறார் தாய். இக்கவிதை தாய் நாட்டுப் பற்றை வெளிப்படுத்துகிறது.

“இங்கே

வீடு

கிடைப்பதற்குள்

அங்கே

நாடு

கிடைத்துவிடும்”[31]

தமிழகத்தில் உள்ள அகதிகள் வீடுகள் இல்லாமல் தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன. ஈழத்தமிழர்க்கு என்று ஒரு தனி நாடு அமைந்துவிடும் என்ற நம்பிக்கையில்,

“இங்கே வீடு கிடைப்பதற்குள்

அங்கே நாடு கிடைத்துவிடும்”[32]

“குறி தவறாமல்

எங்களைச்

சுட

சுட்டும் பழகும்

மாதிரிப்

பொம்மைகள்

தமிழக

மீனவர்கள்”[33]

இலங்கை இந்தியாவின் அண்டை நாடாக இருந்தாலும் தமிழக மீனவர்கள் கடலில் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதே சமயம் இலங்கையில் உள்ள தமிழர்களையும் இலங்கை இராணுவம் சுட்டுக் கொல்கிறது. இதனைக் குறிதவறாமல் எங்களைச் சுட சுட்டுப்பழகும் மாதிரிப்

பொம்மைகள் தமிழக மீனவர்கள் என்ற கவிதை இந்திய மீனவர்களின் (தமிழர்கள்) ஆதரவற்ற தன்மையை இந்திய அரசின் அலட்சியத்தை வெளிப்படுத்துகிறத.

“அவ்வப்போது

எடுத்து

அணைத்து

முத்தமிட்டுக்

கொள்கிறோம்

கடற்படை

வெளிச்சங்களிலிருந்து

எங்களைக்

காப்பாற்றிய

அந்தக்

கறுப்புச்

சேலையை”[34]

இலங்கையிலிருந்து உயிருக்குப் பயந்து தப்பித்து வரும் தமிழர்கள் கடலில் படகில் வரும்போது இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவதுண்டு. அவ்வாறு தேடும்போது அதிலிருந்து தப்பிக்க கருப்பச் சேலை (அல்லது) பயணம் செய்வர். அவ்வாறு தங்களைக் காப்பாற்றிய கருப்பு சேலையை அடிக்கடி எடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொள்கிறோம். எநிகணைகளில் ஒன்று அம்மாவின் உடல் இருக்கும். வீட்டில் விழுந்தால் தீவைத்த எரித்தது போல் ஆகிவிடும் என ஓங்குகிறான் ஒரு அகதி.

“இங்கேயம்

நனைக்கிறது

மழை

ஈரமே

இல்லாமல்”[35]

ஈழத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் சிங்கள இராணுவ விமானங்கள் பாங்குகள் மூலம் குண்டுகள் வீசப்பட்ட போது அஞ்சி ஓடிப் பதுங்கின. அதே போல் இங்கே அகதி முகாமில் தீபாவளிப் பட்டாசுச் சத்தம் கெட்டால் ஓடிப்பதுஙகின இதை உடலசைப் பறவைகள் அஞ்சுமே என்று பட்டாசு வெடிக்காத தமிழ் நாட்டு ஊர்கள்

இருக்கின்றன. அதுபோல எங்கள் குழந்தைகளுக்காக பட்டாசு வெடிக்காதீர்கள் என்ற கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

“சாலைபோடும்

பெருவண்டியைப்

பார்த்தும்

பதறிப் போய்ப்

பதுங்குகின்றன

விளையாடிக்

கொண்டிருந்த

குழந்தைகள்”[36]

இலங்கையில் தமிழ்க்குழந்தைகள் இராணுவ பாங்குகளைக் கண்டு அஞ்சும். அக்குழந்தைகள் இங்கே அகதியாய் வந்த பிறகும் சாலை போடும் ரோலர் பெருவண்டிகளையும் டாங்குகள் என நினைத்து அஞ்சி ஓடுகிறன்றன என்ற கவிதை குழந்தைகளின் மன உலகம் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. தந்தையின் உடலைக் கூட பார்க்க முடியாத அவலம் புத்தமதத்தைப் பின்பற்றும்,

“பச்சிளங்குழந்தையை

உடல்நெடுக

இப்படி

உளியால்

கொந்த்தியிருக்கிறார்கள்

புத்தர் சிலைக்கு

முயற்சித்திருப்பார்களோ”[37]

சிங்களர்கள் ஈழத் தமிழ்க் குழந்தைகளைக் கூட வெளட்டிக் கொன்றுள்ளார்கள். அதன் வெட்டுக் காயத்தைப் பார்த்து புத்தர் சிலையைச் செய்யத் தான் உளியால் செதுக்கினார்களோ என்று பழிக்கிறார் கவிஞர்.

“எங்கள் வீட்டில்

அவர்கள்

கொள்ளையடித்தார்கள்

உங்கள் வீட்டில்

நாங்கள்

வெள்ளையடிக்கிறோம்”[38]

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் அகதிகளாய் வந்து படிந்தும் பணி இல்லாமையால் வீட்டிற்கு சுண்ணாம்பு பெயிண்டை அடிக்கும் வேலைகளைப் பார்த்தார்கள். அனத்ததன் எங்கள் வீட்டில் சிங்களர்கள் கொள்ளை அடித்தார்கள். நாங்கள் உங்கள் வீட்டில் வெள்ளை அடிக்கிறோம் என்ற கவிதை அவர்களின் குரலாய் ஒலிக்கிறது.

“விடைபெறும்போது

நீங்கள் சொந்த

நாட்டுக்குத்

திரும்புவீர்கள்

நிரந்தரச் சிறையினில்

எங்களை

விட்டுவிட்டு”[39]

என்னும் கவிதையின் மூலமாக விளக்குகிறார்.

முடிவுரை

மனித சமுதாயத்தின் தொடக்க கால வாழ்க்கை காட்டுமிராண்டியாக இருந்து பின்பு ‘இனக்குழு’ வாழ்க்கையாக மாறி, பின்னா; குடும்ப அமைப்பாகவும் மாறி ‘தாய்வழிச் சமூகம்’ நிலையும் சுட்டப்பட்டுள்ளது. இதனை முன்னிறுத்தி ‘வலி’ என்னும் கவிதைத் தொகுப்பில் ஈழ மண்ணில் விளைந்த நெருப்புப் பிழம்புகளால் எரியப்பட்டு எஞ்சியவர்கள் தமிழகத்தில் புலம்பெயாந்தவர்களாக வாழ்வியலை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இருந்தபொழுதும் அவர்களுக்குள் வலிகள் நிறைந்திருக்கின்றன என்பதை தன் கவிதைகள் மூலமாக சமூகத்திற்கு வெளிப்படுத்துகிற வண்ணம் அமைந்திருப்பதை இவ்வாய்வு நுணுகி வெளிப்படுத்துகிறது.

சான்றெண் விளக்கம்

1. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப. 761.
2. ச.வே. சுப்பிரமணியன், பட்டினப்பாலை, ப. 433.
3. மேலது., ப. 110.
4. மு.வ.வின் படைப்பிலக்கியம். க.த. திருநாவுக்கரசு அணிந்துரை, ப. 3.
5. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 25.

6. அறிவுமதி, அணுத்திமிர் அடக்கு. ப. 161.
7. மேலது., ப. 161.
8. அகிலன், எழுத்தும், வாழ்க்கையும், ப. 5.
9. அறிவுமதி, கடைசி மழைத்துளி. ப. 221.
10. தி.சு. நடராஜன், திறனாய்வக்கலை, ப. 56.
11. மேலது., ப. 55.
12. அருணாசலம், மு. இராஜா வரதராஜா, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 448.
13. அறிவுமதி, மணி முத்தா ஆற்றங்கரையில், ப. 255.
14. மனு, மனுதாம சாஸ்திரம், ப. 427.
15. மேலது., ப. 428.
16. சு. வேங்கடராமன், அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, ப. 43.
17. அறிவுமதி, நிரந்தர மனிதாகள், ப. 54.
18. அறிவுமதி, வலி, ப. 68.
19. மேலது., ப. 3.
20. மேலது., ப. 8.
21. மேலது., ப. 12.
22. மேலது., ப. 15.
23. மேலது., ப. 18.
24. மேலது., ப. 20.
25. மேலது., ப. 25.
26. மேலது., ப. 32.
27. மேலது., ப. 33.
28. மேலது., ப. 40.
29. மேலது., ப. 41.
30. மேலது., ப. 45.
31. மேலது., ப. 48.
32. மேலது., ப. 52.
33. மேலது., ப. 61.
34. மேலது., ப. 72.
35. மேலது., ப. 78.
36. மேலது., ப. 83.
37. மேலது., ப. 85.
38. மேலது., ப. 86.
39. மேலது., ப. 90.

துணைநின்ற நூல்கள்

References

அறிவுமதி, வலி, கவிதா பப்ளிகேஷன், சென்னை-17, முதற்பதிப்பு-2006.

அகிலன், எழுத்தும் வாழ்க்கையும், தமிழ் புத்தகாலயம், சென்னை, பதிப்பு-1978.

ச.வே. சுப்ரமணியன், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (தொகுதி-2), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2010.

தி.சு. நடராஜன், திறனாய்வுக்கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு-2003.

வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், சூரியா பதிப்பகம், சென்னை, பதிப்பு-2000.